1992 பிப்ரவரி 7]

88—

சிவகாசியில் நகரப்பேருந்து அதிகரித்தல்.

*3889 திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தொழிலாளர்கள் அதிகமாக வாழும் சிவகாசி தொகுதியில் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூடுதல் நகரப் பேருந்துகள் விடும்படிக் கோரி வரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, தேவைக்கேற்ப கூடுதல் நகரப் பேருந்துகள் விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10–05.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடனே அறிக்கை விடப்பட்ட நகரங்களில் ஒன்று சிவகாசி நகரமாகும். தொழில் மிகுந்த நகரமாக அறிக்கை விடப்பட்ட நகரமாகும். அப்படிப்பட்ட சிவகாசி தொகுதியிலே, 4,000-க்கும் அதிகமான தீப்பெட்டித் தொழிற்சாலைகளும், 2,000-க்கும் அதிகமான பட்டாசுத் தொழிற்சாலைகளும் உள்ளன. அவற்றிலே எல்லாம் வேலை செய்கின்ற அந்தத் தொகுதியில் வாழும் மக்கள் எல்லாம் நீண்ட தூரம் சென்று வேலை செய்ய வேண்டி உள்ளது. குறிப்பாக பெண்கள் அதிகமாக வேலை செய்ய வேண்டிய நிலைமை உள்ளதால் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பெண்களுக்கு என தனியாக பேருந்து விட அனுமதியளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதியே தீப்பெட்டித் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற பகுதியாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெண்களுக்காக தனிப் பேருந்து இயக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். தமிழகத்தை இன்று ஆண்டு கொண்டிருக்கிற ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவினுடைய ஆட்சியில் அவர் கேட்கின்ற இடங்களுக்கு 2 பேருந்துகள் பெண்களுக்காக இயக்கப்படும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)